**கரூர் நகராட்சியில் 2019ம் வருடம் ஜீன் மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**

1)நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.48800/2006/எல் நாள்.20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 01.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியின் (Tamil Nadu Municipal Accounts Service) கீழ் <u>சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை நகராட்சி கணக்கு அலுவலர் | Senior Municipal Accounts Officer | 1 |
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class II கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம் (சி1/6381/2017)

தீர்மான எண்.1585 அனுமதிக்கப்பட்டது.

2) இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்கள் 2018–19ம் ஆண்டுக்கு 27.03.2018ம் தேதி பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் (1) பேருந்து நிலையத்தின் கீழ்பக்கம் உள்ள நகராட்சி இரு சக்கர வாகன காப்பகம் மற்றும் (2) பேருந்து நிலையத்தில் கையில் தட்டேந்தி பூக்கள் விற்பனை செய்தல் ஆகிய குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஆகையால் மேற்படி இரண்டு குத்தகை இனங்கள் நகராட்சி துறை மூலம் 01.04.2018முதல் வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி இரண்டு இனங்கள் 01.04.2018 முதல் துறை வசூல் மேற்கொள்ளவும் அதற்கு தேவையான இரசீதுகள் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று அச்சடித்துக் கொள்ள ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி பெறப்பட்டது. மேற்படி விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/– பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | உள்ளூர் அச்சகத்தின் பெயர் / முகவரி | வாகன காப்பகம் | | | | கையில் தட்டேந்தி பூக்கள் விற்பனை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இரு சக்கர மோட்டார் வாகனம் | | சைக்கிள் | | | |
| | | இரசீது எண்ணிக்கை | ரூ | இரசீது எண்ணிக்கை | ரூ | இரசீது எண்ணிக்கை | ரூ |
| 01 | ஸ்ரீ. அங்கு அச்சகம், 68/40,புது தெரு, காவலர் குடியிருப்பு எதிர்புறம், கரூர் | 20000 | 8000/- | 2000 | 2000/- | 1000 | 1000 /- |
| 02 | நர்மதா கிராபிக்ஸ், செங்குந்தபுரம், மெயின்ரோடு, கரூர். | 20000 | 9000/- | 2000 | 2800/- | 1000 | 1400 /- |
| 03 | காவ்யா கிராபிக்ஸ், 12, செங்குந்தபுரம், மெயின்ரோடு, கரூர். | 20000 | 8300/- | 2000 | 2600/- | 1000 | 1300 /- |

**அலுவலகக் குறிப்பு**

1.வரப்பெற்ற உள்ளூர் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட ஸ்ரீஅங்கு அச்சகம், கரூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2.அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி ஸ்ரீஅங்கு அச்சகத்தில் இரசீதுகள் அச்சடித்தற்கும், அன்னாருக்கு தொகை வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(அ6/10390/2017)

தீர்மான எண்.1586 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8ல் வெங்கமேடு தண்ணீர் டேங் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள மின்கம்பம் எண்.8/12 பழுதடைந்தநிலையில் இருந்ததால் (இற்றுப்போய்) உடைந்துவிட்டது. எனவே, உடைந்த மின்கம்பத்தை மாற்றி புதிதாக மின்கம்பம் மாற்றி அமைத்து தருமாறு மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக கடிதத்தின் மூலம் அனுமதி கோரியதில் க.எண். உ.மி.பொ/இ.கா/வெ.மே/கோ.கட்டு/ந.எண்.43/1920 நாள்.13.06.2019ன்படி மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.4,360/–யை செலுத்த கோரியதின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி மின் கம்பம் எண்.8/12 மாற்றி அமைக்க வேண்டியதின் அவசர அவசியத்தினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி பொறியாளர் / ஆணையர் (பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொகை ரூ.4,360/–யை மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (இ3/5879/2019)

தீர்மான எண்.1587 அங்கீகரிக்கப்பட்டது.

4)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதியில் வார்டு 2–ல் திருக்காம்புலியூர் பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு இல்லாததால், ஸ்ரீ மாரியம்மன் கோவில் கிணற்றிலிருந்து மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிக்கு வரும் தண்ணீரை பகிர்மான குராய் அமைத்து சீரான முறையில் தண்ணீர் சப்ளை செய்யவும் தற்சமயம் வறட்சி எதிர்நோக்கி உள்ளதால், மேற்படி பணியினை உடனடியாக மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.25இலட்சத்தினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/5236/2019)

தீர்மான எண்.1588 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள அடிபம்ப் ஆழ்குழாய் கிணறுகள் 70 எண்ணிக்கைகள் இருக்கின்றது. தற்சமயம் மேற்படி அடிபம்புகளை சீரமைக்கவும் பொதுமக்களுக்கு சீரான முறையில் தண்ணீர் வழங்கவும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00லட்சத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/5233/2019)

தீர்மான எண்.1589 அனுமதிக்கப்பட்டது.

6)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள பகுதிகளுக்கு பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை வாங்கப்பாளையம் நீருந்து நிலையம் மற்றும் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து காவேரி தண்ணீர் சப்ளைசெய்யப்பட்டு வருகிறது. வாங்கப்பாளையம் மற்றும் வாங்கலில் உள்ள இரண்டு 200 KVA ஜெனரேட்டர் சர்வீஸ் செய்து இரண்டு வருடத்திற்கு மேலாகி உள்ளதால் தற்சமயம் வறட்சி காலமாக இருப்பதால் தொடர்ச்சியாக மின்மோட்டார்கள் இயக்க முடியாத சூழ்நிலையாக இருப்பதால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் சப்ளை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுவதால் மேற்படி வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் மற்றும் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 200KVA ஜெனரேட்டர்களை பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.45லட்சத்திற்கு அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.45லட்சத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/5235/2019)

தீர்மான எண்.1590 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதி வார்டு எண்.3,4 மற்றும் 5 வரையுள்ள பகுதிகளுக்கு காவேரி ஆற்றிலிருந்து சுகாதாரமான குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது தற்சமயம் வறட்சி காலமாக இருப்பதால், தொடர்ச்சியாக காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் தொடர்ச்சியாக வழங்க முடியாத சூழ்நிலையில் ஏற்படுவதால் கரூர் பகுதியில் உள்ள அமராவதி ஆற்றில் உள்ள வட்ட கிணற்றிலிருந்து, குடிநீர் சப்ளை செய்ய வேண்டியிருப்பதால் கிணற்றில் உள்ள 15HP மின்மோட்டாரை சரி செய்யப்பட்டு, பேனல் போர்டு மற்றும் வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் உள்ள 15H.Pமின்மோட்டார் மற்றும் 60 H.Pமின்மோட்டார் பழுதுகளை சரிசெய்யவும் தற்சமயம் நீர்ஊற்று கிணற்றில் கேலரி பைப் கூடுதலாக இறக்கவும் மற்றும் 12HP மின்மோட்டார் பராமரிப்பு பணி வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் உள்ள குளோரினேசன் செய்ய பயன்படும் 1.5HP மின்மோட்டார் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக புதிதாக வாங்கவும் ஆகிய மேற்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.65லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்க்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.65லட்சத்தினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/5237/2019)

தீர்மான எண்.1591 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி வார்டு எண்.14, NSK நகர் பொதுக்கழிப்பிடம் கிழக்கு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு போதுமான அளவு இல்லாத காரணத்தினால் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக, தற்சமயம் வறட்சி காலத்தினை எதிர்நோக்கி உள்ளதால், பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்ட போது நேரடி அறிவுறுத்தலின்படி மேற்காணும் இடத்திற்கு புதிதாக ஆழ்குழாய் கிணறு மற்றும் மோட்டார் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.75லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்க்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75லட்சத்தினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/5234/2019)

தீர்மான எண்.1592 அனுமதிக்கப்பட்டது.

9)இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22ல் முனியப்பன் கோவில் தெருவில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் கற்கள் பழுதடைந்துள்ளது. பழுது பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,40,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2019)

தீர்மான எண்.1593 அனுமதிக்கப்பட்டது.

10)தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் பயிற்சி நிறுவனத்திற்கு இந்நகராட்சி இளநிலை பொறியாளர் திரு.என்.மஞ்சுநாத்சிங் அவர்கள் புத்தாக்க பயிற்சிக்கு 17.06.2019 முதல் 28.06.2019 வரை பயிற்சியில் கலந்து கொள்வதற்கு மேற்படி பயிற்சி காலங்களில் உணவு மற்றும் தங்கும் வசதிக்கான ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.1,000/— வீதம் 10 நாட்களுக்கு ரூ.10,000/— செலவினம் மேற்கொள்ள இம்மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் முன் அனுமதியுடன் பயிற்சிக்கான தொகை ரூ.10,000/—யை செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (சி1/2019)

தீர்மான எண்.1594 அங்கீகரிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதிகளான வார்டு எண்.37 வடக்கு காந்திகிராமம் வார்டு எண்.39 கங்கா நகர், வார்டு எண்.40 ராயனூர் ஏ.டி. காலனி மற்றும் அண்ணா நகர் 2வது கிராஸ், வார்டு.41 பு.செல்லாண்டிபாளையம், வார்டு.44 சத்தியமூர்த்தி நகர் 5வது கிராஸ், வார்டு.47 பாரதிதாசன் நகர், புதுவசந்தம் நகர், திருமலை நகர் மற்றும் வார்டு.48ல் மட்டிப்பாளையம் ஆகிய பகுதிகளில் தண்ணீர் வழங்க ஏதுவாக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றில் உள்ள 2எச்.பி., நீர்முழ்கி மின்மோட்டார் பழுதடைந்து இயக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதால் மேற்படி பகுதியில் புதிதாக 2எச்.பி., நீழ்முழ்கி மின்மோட்டார்கள், பேனல் போர்டு குடிநீர் குழாய்கள் மற்றும் பவர் கேபிள்கள் சப்ளை செய்து பொருத்தி கொடுக்கும் பணிக்கு ரூ.7.75இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியின் அத்தியாவசிய அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகளில் குறைவான தொகையுடைய Mallika

Engineering Contractor, Karur என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கி பணியினை செய்து முடித்து ரூ.7,74,729/—யை குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **1)**மல்லிகா இன்ஜினியரிங் கான்ட்ராக்டர், கரூர் | 0.07% குறைவு |
| **2)**நவலடியான் எலக்ட்ரிக்கல்ஸ் ரீவைண்டிங், கரூர் | 1.31% அதிகம் |
| **3)**சிவசக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கரூர் | 2.75% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
**1)**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**2)**மேற்படி பணியியின அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(4922/2019/இ3)**

தீர்மான எண்.**1595** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**12)**கரூர் நகராட்சிக்கு சொந்தமான சணப்பிரட்டி குடிநீர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள **35** எச்.பி மின் மோட்டாருக்கான 3 phase panel board பழுது பார்க்கும் பணிக்கு **ரூ.0.65 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் **15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **A Sun Power Engineers, Karur** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.**55,530**/-யை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | **A Sun Power Engineers, Karur** | **0.63%** குறைவு |
| 2) | **Power Engineers, Karur** | **2.56%** அதிகம் |
| 3) | Best Rewinding Works, Karur | **5.94%** அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
**1)**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**2)**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(இ3/4301/2019)**

தீர்மான எண்.**1596** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**13)**கரூர் நகராட்சி வார்டு—**17**, கதவு எண்.**36**(ப), **2**(பு) வடக்கு பிரதட்சணம் ரோட்டில் வசிக்கும் திருமதி.எஸ்.ஜமுனாராணி க/பெ (லேட்) செல்லமுத்து என்பவர் தமது வீட்டின் வரிவிதிப்பு எஎண.**082/017/00236**ன் உயர்வு செய்யப்பட்ட சொத்துவரியினை ரூ.**7,666**/—னை வசூலிக்கக் கூடாது என கரூர் மாவட்ட முன்சீப் நீதிமன்ற வழக்கு எண்.ஒ.எஸ்.எண்.**267/2019**, ஐ.ஏ.எண்.**658/2019**ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதாட திரு.பி.நகுல்சாமி நகர்மன்ற வழக்கறிஞருக்கும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதி வழங்கலாம். **(அ2/4421/2019)**

தீர்மான எண்.**1597** அனுமதிக்கப்பட்டது

**14)**கரூர் நகராட்சி வார்டு—**23**, சொத்துவரி விதிப்பு எண்.**082/023/01117** மற்றும் **082/023/01118** ஆகியவற்றின் சொத்துரிமையாளர் திரு.கே.ரத்தினம் என்பவர் தமக்கு ரசீது வழங்கப்படவில்லை என மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் எண்.**08/2019** எண்ணுள்ள வழக்கு தொடர்ந்துள்ளார்.
இவ்வழக்கில் ஆஜராகி வாதாட திரு.பி.நகுல்சாமி நகர்மன்ற வழக்கறிஞருக்கும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் நகர்மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதி வழங்கலாம். **(அ2/1208/2019)**

தீர்மான எண்.1598 அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சி வார்டு–19, கதவு எண்.4 அண்ணா நகர் 1வது கிராஸில் வசிக்கும் திரு.பி.அமுதவள்ளி த/பெ சி.பெரியசாமி என்பவர் தமது சொத்துவரி விதிப்பு எண்.082/019/00001, 082/019/00005க்கு உயர்த்தப்பட்ட வரி அதிகமாக உள்ளது என கரூர் மாவட்ட முன்சீப் நீதிமன்ற வழக்கு எண்.ஓ.எஸ்.251/2019, ஐ.ஏ.எண்.63/2019 எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதாட திரு.பி.நகுல்சாமி நகர்மன்ற வழக்கறிஞருக்கும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதி வழங்கலாம். (அ2/4422/2019)

தீர்மான எண்.1599 அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு தினசரி வழங்கப்பட்டு வந்த நிலவேம்பு குடிநீர் பவுடர் தற்போது இருப்பு குறைவாக உள்ளதால் 100கிலோ வாங்கி வழங்க கோரி சித்த மருத்துவமனை கரூர் அவர்களின் 10.06.2019ம் தேதியிட்ட கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, நிலவேம்பு குடிநீர் பவுடர் 100கிலோ டேம்ப்கால், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அதற்கான செலவினத் தொகை ரூ.40,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத் தொகை ரூ.40,000/–யை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (2644/2007/எச்1)

தீர்மான எண்.1600 அனுமதிக்கப்பட்டது.

17)கரூர் நகராட்சியில் பணிபுரிந்து வரும் ஓட்டுநர்கள், மின்கம்பியாளர், ஹெல்பர்கள் அலுவலக உதவியாளர்கள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், மகப்பேறு ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு உட்பட சுமார் 347 பணியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டுக்கு சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்கிட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)அரசு ஆணை எண்.60 கைத்தறி கைவினை டெக்ஸ்டைல்ஸ் மற்றும் காதி (இ1) துறை, நாள்.03.03.2016ல் வழங்கப்பட்டுள்ள உத்திரவுப்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25480/ஜே3 நாள்.13.06.2016ன்படியும் சீருடைகள் அனைத்தும் தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் கோவை–18 நிறுவனம் மூலம் வாங்கி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2)அரசு ஆணை எண்.168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ–1) துறை நாள்.16.11.2015ல் உத்திரவிடப்பட்டுள்ளபடி பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளருக்கு வழங்கப்படும் சீருடை அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை வழங்கிடவும் ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு ஜோடி சீருடைக்கு தையல் கூலி ரூ.400/– வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.800/–ம் பெண் பணியாளர்களுக்கு ஒரு ரவிக்கைக்கு தையல் கூலி ரூ.40/– வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.80/–ம் வழங்கிட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) பொதுநிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம். (எச்2/3617/2019)

தீர்மான எண்.1601 அனுமதிக்கப்பட்டது.

18)கரூர் நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்கண்டுள்ள பணியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டுக்கு காலணிகள் வழங்க வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1)துப்புரவு பணியாளர்கள் மொத்தம் | = 251 |
| 2)ஓட்டுநர்கள் | = 20 |
| 3)துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள் | = 14 |

மேற்படி துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிமேற்பார்வையாளர்களுக்கு காலணிகள் மற்றும் ஓட்டுநர்களுக்கு ஷீ வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (எச்2/5383/2019)

தீர்மான எண்.1602 அனுமதிக்கப்பட்டது.

19)தூய்மை இந்தியா திட்டம் 7th SHPC திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன்கீழ் Revamping of Dump site through Bio Mining to recover the land at compost yard அமைக்கும் பணி ரூ.933.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை (எம்.எஸ்) எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ.IV) நாள்.22.02.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள முதன்முதலாக 10.04.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சம்) | ஒப்பந்தத் தொகை (ரூபாயில்) | மதிப்பீட்டு சதவீதம் | விலை குறைப்புக்கு பின் மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1) | திருவாளர்.Zigma Global Environ Solution Pvt., Ltd., Erode | ரூ.933.00 இலட்சம் | ரூ.9,38,25,922/– | 3.60% சதம் அதிகம் | 3.60% சதம் அதிகம் |
| 2) | திருவாளர். Sri Bommu Industries, Coimbatore | | ரூ.13,46,44,450/– | 48.67% சதம் அதிகம் | 48.67% சதம் அதிகம் |

அ.கு. 1)மேற்படி திட்டபணிக்கு தூய்மை இந்தியா திட்டம் 7th SHPC திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மத்திய அரசின் மான்யத் தொகை ரூ.326.55லட்சம், மாநில அரசின் மான்யத் தொகை ரூ.513.15லட்சம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.93.30லட்சம் செலவு செய்து கொள்ள மன்றம் தீர்மான எண்.1047 நாள்.27.08.2018ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2)மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திருவாளர்.Zigma Global Environ Solution Pvt., Ltd., Erode** என்பவர் மதிப்பீட்டினைவிட கூடுதலான சதவிகிதத்திற்கு ஒப்பந்தப் புள்ளியினை கொடுத்துள்ளார். மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்தினை குறைத்து தரக் கோரி (Negotiation) இவ்வலுவலக கடித ந.க.எண்.இ1/4804/2018, நாள்.17.06.2019ன் மூலம் கோரியதில் ஒப்பந்ததாரர் 24.06.2019ம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விபரம் சரியான விலை விகிதம் என்றும், தனது நிறுவனத்திற்கு திருச்சி, ஈரோடு மாநகராட்சிகள் மற்றும் தாம்பரம், பல்லாவரம், சிதம்பரம் நகராட்சிகளில் பழைய குப்பைகளை அகற்றும் பணிக்கு ஒருகனமீட்டருக்கு ரூ.670/– என உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விபரமான ரூ.662/–யை ஏற்று உத்தரவு வழங்குமாறு கோரியுள்ளார். மேலும் மேற்படி பணிக்கான மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள விலை விபரமானது 2017–2018ம் ஆண்டிற்கான விலை விபரமாகும். நடப்பாண்டு விலை விபரத்தின்படி கணக்கிடுகையில் 8சதவீத கூடுதல் தொகை வரப்பெறுவதினாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விபரம் மதிப்பீட்டுத் தொகையினைவிட 3.60சதவீதம் கூடுதலாகவும், நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட 5 சதவீத கூடுதல் தொகைக்குள் இருப்பதாலும் மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக் கொள்ளவும் மதிப்பீட்டினைவிட கூடுதலான தொகையுடைய ஒப்பந்தப்புள்ளியான **திருவாளர்.Zigma Global Environ Solution Pvt., Ltd., Erode** என்பவரது 3.60சதவிகித கூடுதல் தொகையுடைய ஒப்பந்தப்புள்ளியினை அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர்

அவர்களின் முன்அனுமதியுடன் ஏற்று அவர் மூலம் பணியினை செய்து முடிக்கவும், அதற்கான உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/4804/2018)

தீர்மான எண்.1603 அங்கீகரிக்கப்பட்டது.

20)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சி காலங்களில் பொதுமக்களுக்கு தங்குத் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வதற்கு வறட்சி நிவாரணத் திட்டம் 2019–2020ன்கீழ் (SDRF திட்டம்) ரூ.70.00இலட்சத்திற்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | கரூர் நகராட்சிக்குட்பட்ட வாங்கப்பாளையம் பேருந்து நிறுத்தம் முதல் அரசு காலனி வரை (2.0கி.மீ) புதிதாக குடிநீர் விநியோக குழாய் அமைக்கும் பணி | 1 | 25.00 |
| 2 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான வாங்கப்பாளையம் நீரூந்து நிலையத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைக்கும் பணி | 1 | 3.50 |
| 3 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதிதாக 25எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார் (2300 Lpm x 48m Head) அமைக்கும் பணி | 1 | 3.50 |
| 4 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டளை (தாந்தோணி பகுதி) தலைமை நீரேற்று நிலையத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் திட்டத்தில் புதிதாக 100எச்.பி திறன் கொண்ட நீர்முழ்கி மின்மோட்டார் (5000 Lpm x 70m Head) அமைக்கும் பணி | 1 | 10.00 |
| 5 | கரூர் நகராட்சிக்கு சொந்தமான மூலக்காட்டனூர் (தாந்தோணி பகுதி) நீரூந்து நிலையத்தில் புதிதாக 75எச்.பி திறன் கொண்ட நீர்முழ்கி மின்மோட்டார் (3500 Lpm x 60m Head) அமைக்கும் பணி | 2 | 18.00 |
| 6 | கரூர் நகராட்சி, வார்டு எண்.36, இ.பி காலனியில் புதிதாக குடிநீர் பிரதான குழாய் (1.30கி.மீ) அமைக்கும் பணி | 1 | 10.00 |
| | **மொத்தம்** | **7 எண்ணம்** | **ரூ.70.00 இலட்சம்** |

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்
2)மேற்படி பணிக்கு குடிநீர் அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம். .
3).மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.70.00 லட்சத்தை வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/12470/2016)

தீர்மான எண்.1604 அனுமதிக்கப்பட்டது.

21)இந்நகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் அமைக்கப்பட்டுள்ள Processing Plant வளாகத்தினுள் உள்ள Bio-Methanation Plant IUDM 2013-2014 ம் ஆண்டு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு தற்போது தினசரி 3 முதல் 31/2 மெட்ரிக் டன் காய்கனி இலை கழிவுகள், உணவு கழிவுகள் மற்றும் இறைச்சி கழிவுகள் சேகரம் செய்து அதனை அரைத்து மீத்தேன் வாய்வினை உற்பத்தி செய்து அதன் மூலம் மின் உற்பத்தி செய்து வளாகத்தினுள் உள்ள தெருவிளக்குகள் மற்றும் மின்மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது Bio-Methanation Plantல் மீத்தேன் எரிவாயு உற்பத்தியாகும் FRP Chamberல் மேல்பகுதியில் concrete உடைந்து FRP Sheet round பழுதடைந்து உள்ளது. மேலும் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள 25M$^3$ கொள்ளளவு கொண்ட Baloon அடிப்பகுதியில் ஓட்டையாக உள்ளதால் இதனை சரிசெய்ய இயலாதநிலையில் உள்ளது. எனவே, இரண்டு பழுதுகளை நீக்கம் செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினம் வருவாய் நிதி அல்லது திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/5390/2019)

தீர்மான எண்.1605 அனுமதிக்கப்பட்டது.

22)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6ல் உள்ள குளத்துபாளையம் பகுதியில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் இரயில்வே பாதையின் கீழ் குகை வழிப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ளது. அப்பாலத்தின் இருபுறமும் அமைந்துள்ள தடுப்பு சுவர் மற்றும் Base Culvert ன் இருபுறமும் உட்புறத்தில் tiles பதித்து வண்ணப் பூச்சு பூசவும், சுவரின் உட்பகுதியில் tiles பதிக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.9.00இலட்சத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/3463/2019)

தீர்மான எண்.1606 அனுமதிக்கப்பட்டது.

23)மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் தலைமையில் 25.06.2019–ம் தேதி நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளில் கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள், தொழிற்கூடங்கள், கல்விகூடங்கள் மற்றும் அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்படாத இனங்கள், மழைநீர் தொட்டி அமைக்கப்பட்டு தற்போது செயல்படாத நிலையில் உள்ள இனங்கள் அனைத்தும் கணக்கெடுப்பு பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கணக்கெடுப்பு பணிகளுக்கு அறிவிப்பு கடிதம் மற்றும் மழைநீர் சேகரிப்பு ஸ்டிக்கர் அச்சடித்து உடனடியாக பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு கணக்கெடுப்பு பணிகளுக்கு அறிவிப்பு கடிதம் மற்றும் ஸ்டிக்கர் அச்சிடப்பட்டு உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | அறிவிப்பு கடிதம் தொகை (1 படிவம் வீதம்) ரூபாயில் | ஸ்டிக்கர் (1 ஸ்டிக்கர் வீதம்) ரூபாயில் |
|---|---|---|---|
| 1) | M/s.Legal Sky Printers, Karur | 1.00 | 1.80 |
| 2) | தனம் பிரிண்டர்ஸ், கரூர் | 1.10 | 1.90 |
| 3) | தருண் ஆப்செட் பிரிண்டர்ஸ், கரூர் | 1.20 | 2.00 |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Legal Sky Printers, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி

பணியினை செய்து முடிக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எப்.1/5676/2019)

**அ.கு:—**

(1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
(2) மேற்படி பணிக்கான உத்தேச செலவினம்
ரூ.1,00,000/— நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.1607 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

24)இந்நகராட்சிக்குட்பட்ட பாத்தியப்பட்ட சீனிவாச நகரில் உள்ள ஆண், பெண் இருபாலர் நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2018—2019ம் ஆண்டுக்கு பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினமணி நாளிதழில் 25.05.2018ம் தேதியில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணம் ரூ.13,709/— (ரூபாய் பதிமூன்றாயிரத்து எழுநூற்றி ஒன்பது மட்டும்) மேற்படி எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன் (மதுரை) லிட்., விளம்பர நிறுவனத்திற்கு வழங்கக் கோரி பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். அதன்படி பட்டியலில் கண்டுள்ள தொகையினை மேற்படி விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். (அ6/4723/2014)

தீர்மான எண்.1608 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சி இனாம்கரூர் பகுதி வார்டு எண்.1 முதல் 14 வரையுள்ள பகுதி மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 6000000லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்டு நாள் ஒன்றுக்கு 120லிட்டர் ஹைபோ குளோரைடு தேவைப்படுவதால் 2019—2020ம் ஆண்டிற்கு தேவையான ஹைபோ குளோரைடு திரவத்தினை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.7.00இலட்சத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (5950/2019/இ3)

தீர்மான எண்.1609 அனுமதிக்கப்பட்டது.

26)கரூர் நகராட்சி வார்டு எண்.01 பெரிய கோதுார் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்**

1. M.Hemalatha, கரூர் மதிப்பீட்டை விட 0.14% சதம் குறைவு
2. Sri,Cheran Construction, கரூர் மதிப்பீட்டை விட 3.29% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M.Hemalatha, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2019)

தீர்மான எண்.1610 அங்கீகரிக்கப்பட்டது.

27)கரூர் நகராட்சி வார்டு எண்.06 நேதாஜி நகர் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்**

1. PRG Construction, கரூர் மதிப்பீட்டை விட 0.11% சதம் குறைவு
2. RPS Construction, கரூர் மதிப்பீட்டை விட 3.35% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2016)

தீர்மான எண்.1611 அங்கீகரிக்கப்பட்டது.

28) கரூர் நகராட்சி வார்டு எண்.10 VVG நகரில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்**

1. M.Hemalatha, கரூர் மதிப்பீட்டை விட 0.14% சதம் குறைவு
2. Sri,Cheran Construction, கரூர் மதிப்பீட்டை விட 3.29% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M.Hemalatha, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2016)

தீர்மான எண்.1612 அங்கீகரிக்கப்பட்டது.

29)கரூர் நகராட்சி வார்டு எண்.12 அண்ணா சாலை பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்</u>**

1. PRG Construction, கரூர் மதிப்பீட்டை விட 0.11% சதம் குறைவு
2. RPS Construction, கரூர் மதிப்பீட்டை விட 3.35% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2016)

தீர்மான எண்.1613 அங்கீகரிக்கப்பட்டது.

30)கரூர் நகராட்சி வார்டு எண்.12 கொங்குநகர் கிழக்கு பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்</u>**

1. PRG Construction, கரூர் மதிப்பீட்டை விட 0.11% சதம் குறைவு
2. RPS Construction, கரூர் மதிப்பீட்டை விட 3.35% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2016)

தீர்மான எண்.1614 அங்கீகரிக்கப்பட்டது.

31) கரூர் நகராட்சி வார்டு எண்.22 முனியப்பன் கோவில் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்</u>**

1. PRG Construction, கரூர் மதிப்பீட்டை விட 0.11% சதம் குறைவு
2. RPS Construction, கரூர் மதிப்பீட்டை விட 3.35% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2016)

தீர்மான எண்.1615 அங்கீகரிக்கப்பட்டது.

32) கரூர் நகராட்சி வார்டு எண்.43 கொங்குமுத்து நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்**

1. PRG Construction, கரூர் மதிப்பீட்டை விட 0.11% சதம் குறைவு
2. RPS Construction, கரூர் மதிப்பீட்டை விட 3. 35% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.PRG Construction, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2016)

தீர்மான எண்.1616 அங்கீகரிக்கப்பட்டது.

33)கரூர் நகராட்சி வார்டு எண்.48 வெங்கக்கல்பட்டி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு முதன்முறையாக 18.06.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25இலட்சம்**

1. PRG Construction, கரூர் மதிப்பீட்டை விட 0.11% சதம் குறைவு
2. RPS Construction, கரூர் மதிப்பீட்டை விட 3. 35% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.PRG Construction, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1547, நாள்.31.05.2018ம் தேதி அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.3.25 இலட்சத்தை வறட்சி நிவாரணதிட்டத்தின் கீழ் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/12470/2016)

தீர்மான எண்.1617 அங்கீகரிக்கப்பட்டது.

34)கரூர் நகராட்சி குமரன் உயர்நிலைப்பள்ளியில் மின்விளக்குகள் மற்றும் மின் விசிறிகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மின் பணிகள் மற்றும் கரும்பலகைகளுக்கு கருப்பு வண்ணம் பூசுதல் மற்றும் உட்புற வெளிப்புற சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் , சத்துணவு கூடத்தில் தரைத்தளம் புதுப்பித்தல் மற்றும் மேற்கூரை புதுப்பித்தல் போன்ற மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.15.00 இலட்சத்தை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/6271/2019)

தீர்மான எண்.1618 அனுமதிக்கப்பட்டது.

35)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 குழந்தாகவுண்டனூர் அடுக்குமாடி குடியிருப்பு மாரியம்மன் கோவில் அருகில் சிமெண்ட் காண்கீரிட் கற்கள் பதித்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.40 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்காணும் செலவினத்தொகை ரூ.3.40 இலட்சத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/6272/2019)

தீர்மான எண்.1619 அனுமதிக்கப்பட்டது.

36)கரூர் நகராட்சி பகுதிக்குள் குடிநீர் விநியோகம் செய்யப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் பழுதடைந்துள்ள வால்வு மற்றும் தற்போது புதிதாக Butterfly valve அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 18 இடங்களில் Valve Chambers அமைக்கப்பட வேண்டி உள்ளது இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.4.00 இலட்சத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/6273/2019)

தீர்மான எண்.1620 அனுமதிக்கப்பட்டது.

37)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பகிர்மானக்குழாய் மற்றும் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திற்கு வரும் மெயின் பம்பிங் லைன் ஏற்படும் பழுதுகளையும் வார்டு எண். 6 முதல் 12 வரை

உள்ள வெங்கமேடு கிணற்றிலிருந்து செல்லும் தண்ணீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவுகளை சரி செய்யவும், பகிர்மானக்குழாய்களில் உள்ள கேட்வால்வுகள் மற்றும் ஏர் வால்வுகளை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்காணும் செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ2/5626/2019)

தீர்மான எண்.1621 அனுமதிக்கப்பட்டது.

38)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27ல் உள்ள கூத்தரிசிக்காரத்தெருவில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவிகளின் கழிப்பறை வசதியினை கருத்தில் கொண்டு Modular கழிப்பிடமாக Ready made கழிப்பிடங்களை உடன் அமைத்து கழிப்பிட வசதியினை ஏற்படுத்தும் வகையிலும், பள்ளி மாணவிகளின் நலன் கருதியும் கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்காணும் செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/6329/2019)

தீர்மான எண்.1622 அனுமதிக்கப்பட்டது.